**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்</u>**

**<u>அசல் வழக்கு எண்.167/2020</u>**

**<u>PW2</u>**

| | | |
|---|---|---|
| பெயர். திரு.விஜயராகவன் | த/பெ.திரு.வேணுகோபால் | நாள்.21.01.2026 |

<u>வா.சா.ஆ.2 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

நான் இந்த வழக்கில் தரப்பினரா என்றால் இல்லை. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. மல்லிகா சொல்லி தான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். மல்லிகா எனது உறவினரா என்றால் இல்லை. எனது பக்கத்து வீட்டுக்காரர். எனக்கு பூர்வீகம் ஊனமலை. நான் சிறுவயதிலேயே இருந்து நான் சோத்துப்பாக்கத்தில் வசிக்கிறேன். வாதிகள், பிரதிவாதிகள் யார் யார் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் மல்லிகா, சந்திரா ஆகியோர் வீரராகவனுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

2. எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வீரராகவன் சொத்து அவருடையது என்றும் சொல்கிறார். வாதிகள் சொத்து அவர்களுடையது என்று சொல்கிறார். இந்த வழக்கில் மற்ற பிரதிவாதிகள் யார் யார் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியவில்லை. தாவா சொத்து நத்தம் புறம்போக்கு நிலம். அதன் சர்வே எண்.285/18. தாவா சொத்து எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் மொத்தமே ஒரு சொத்து தான் 336 சதுரமீட்டர் சொத்துக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் பி சொத்தில் பிரச்சனை.

3. எந்த வருவாய் ஆவணத்தை பார்த்து சொத்தின் சர்வே எண்ணை சொன்னேன் என்றால் ஏற்கனவே புகார் கொடுத்துள்ளார்கள் அதை படித்து

பார்த்தேன் அதன் அடிப்படையில் சொன்னேன். தாவா சர்வே எண்.285/18 எத்தனை உட்பிரிவுகளாக பிரிந்துள்ளது என்றால் 285/18 ஏ, 285/18 பி என இரண்டு உட்பிரிவுகள். 285/18 பி க்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். 285/18 ஏ வில் வீடு உள்ளது. 285/18 ஏ க்கு வழக்கு தாக்கல் செய்துள்ளாரா இல்லையா என்றால் எனக்கு தெரியாது.

4. சர்வே எண்.285/18 ஏ, பி ஆகியவற்றிக்கு விஸ்தீரணம் என்ன என்றால் 4 மற்றும் 4 செண்ட்டுகள். தாவா ஏ அட்டவணை சொத்தின் நான்கு பக்க எல்லைகள் வடக்கில் ராதாகிருஷ்ணன் வீடு, மேற்கு பக்கம் ரோடு, தெற்கு பக்கம் சிறுநாவலுரை சேர்ந்த ஒரு நபரின் இடம், கிழக்கு பக்கம் பி சொத்தின் பகுதி. எனக்கு ஜக்குபந்தி விவரம் தெரியவில்லை என்றாலும் நான் வழக்கு சொத்தை பார்க்கவில்லை என்றாலும் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

5. எந்த ஆண்டு எந்த உத்தரவின் அடிப்படையில் சொத்து வாதியின் மூதாதையருக்கு கிடைத்தது என்றால் ஆண்டு தெரியவில்லை. திரிபுரசுந்தரி அம்மாளுக்கு அரசாங்கம் கொடுத்தது. சொத்து திரிபுர சுந்தரி அம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். திரிபுர சுந்தரி அம்மாளுக்கு இந்த சொத்து எப்படி கிடைத்தது என்று எனக்கு தெரியாது என்றாலும் அரசாங்கம் கொடுத்தது என்பது மட்டும் தான் தெரியும்.

6. திரிபுர சுந்தரி அம்மாள் பெயரில் உள்ள பட்டாவை பார்த்துள்ளேன். அது இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல்

செய்துள்ளார்கள். திரிபுர சுந்தரி அம்மாள் பெயரில் பட்டா கொடுக்கும்போது சொத்தின் பழைய சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வாதி பெயரில் உள்ள கூட்டுப்பட்டா எப்போது வழங்கப்பட்டது என்றால் எப்போது வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியவில்லை. பட்டா எண் தெரியும்.

7. திரிபுர சுந்தரி அம்மாளிடமிருந்து சொத்து வாதிகளுக்கு எப்படி வந்தது என்றால் திரிபுர சுந்தரி அம்மாளின் பிள்ளைகள் மூலம் வாதிகள் வாரிசு என்பது தான் தெரியும். எந்த ஆவணத்தின் மூலம் கிடைத்தது என்று தெரியாது என்றால் சரிதான். சாந்தி என்பவர் திரிபுரசுந்தரியின் மகன் கோபால் என்பவரின் மருமகள். மல்லிகா என்பவர் திரிபுர சுந்தரியின் பேத்தி. சந்திரா என்பவர் திரிபுர சுந்தரியின் மருமகள். எனக்கு திரிபுரசுந்தரி அம்மாளின் உறவினர் யார் என்று எனக்கு தெரியாது என்றாலும் வழக்குக்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8. தாவா சொத்து திரிபுர சுந்தரி 12.1.1957 கிரையம் வாங்கிய சொத்து என்றால் எனக்கு தெரியாது. திரிபுர சுந்தரி 4 செண்டை தான் கிரையம் வாங்கினார் என்றாலும் அதை தவிர கூடுதல் சொத்துக்கு அவருடைய வாரிசுகள் உரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக மதுராந்தகம் சார்பு நீதிமன்றத்தில் உரிமை பொறுத்து வழக்கு நடக்கிறது என்றால் சரிதான்.

9. தாவா பி அட்டவணை சொத்தை வாதிகள் எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதை முதல் பிரதிவாதி வீரராகவன் தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் வாதிகளுக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.
மறுவிசாரணை, இல்லை

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.
Sd/-Tmt.N.Valliamma
DM Cum JM
Cheyyur (FAC)